## அர்ச்சனை மலர்கள்



தினசரி காலையோ, மாலையோ நம் அன்னை சக்தியின் திருவுருவம் முன்னர், விளக்கு ஒன்று ஏற்றி, ஏதேனும் ஒரு பிரசாதம் வைத்து, மனசுத்தியுடன் போற்றிகளை கூறி வழிபட வேண்டும். தீப ஆராதனைக்கு பிறகு நமது வேண்டுதல்களை கூறி வழிபாடு முடிப்பதன் மூலம் வாழ்வில் எல்லா உயர்வுகளும் உருவாகும்.

### போற்றிகள்

ஓம் அன்னையே அமுதே போற்றி ஓம்
ஓம் ஆருயிர்த் தாயே போற்றி ஓம்
ஓம் இன்னல் தீர்ப்பாய் போற்றி ஓம்
ஓம் ஈடில்லா செல்வமே போற்றி ஓம்
ஓம் உள்ளம் நிறைந்தவளே போற்றி ஓம்
ஓம் ஊக்கம் அளிப்பவளே போற்றி ஓம்
ஓம் எண்ணக் கருவே போற்றி ஓம்
ஓம் ஏசற்ற திருவே போற்றி ஓம்
ஓம் ஐயம் அற்ற பொருளே போற்றி ஓம்
ஓம் ஒப்பிலா மணியே போற்றி ஓம் 10

ஓம் ஓதுவார் தம் இறையே போற்றி ஓம்
ஓம் கருப் பொருள் யாதும் நீயே போற்றி ஓம்
ஓம் காக்கும் சக்தியே போற்றி ஓம்
ஓம் சக்தியே மூலமே போற்றி ஓம்
ஓம் சாதனைப் பல தருவாய் போற்றி ஓம்
ஓம் எஞ்ஞான்றும் ஒளிர்பவளே போற்றி ஓம்
ஓம் ஞாலத்தின் மூலமே போற்றி ஓம்
ஓம் படமாடும் நாக உருவே போற்றி ஓம்
ஓம் கூடா உறவைக் களைவாய் போற்றி ஓம்
ஓம் கணக்கிலாக் கலைப் பொருளே போற்றி ஓம் 20

ஓம் காணா முதற் பொருளே போற்றி ஓம்
ஓம் தருமத்தில் நிறைபவளே போற்றி ஓம்
ஓம் தாகம் தணிக்கும் நீரே போற்றி ஓம்
ஓம் நல்ல உள்ளம் அளிப்பாய் போற்றி ஓம்
ஓம் நாளும் பொழுதும் காப்பாய் போற்றி ஓம்

ஓம் பள்ளிக்கரணை கொண்டாய் போற்றி ஓம்
ஓம் பாவை உனைப் பணிந்தோம் போற்றி ஓம்
ஓம் மருவூர்த் தாயே போற்றி ஓம்
ஓம் மாமதுரை மாணிக்கமே போற்றி ஓம்
ஓம் சமயபுர மாரியே போற்றி ஓம் 30

ஓம் சாற்றுமறைப் பொருளே போற்றி ஓம்
ஓம் குமரிக் கன்னியே போற்றி ஓம்
ஓம் கூத்தாடுவோன் நாயகியே போற்றி ஓம்
ஓம் திருக்கடவூர் அபிராமியே போற்றி ஓம்
ஓம் தீர்த்திடுவாய் வல்வினை போற்றி ஓம்
ஓம் நெல்லை காந்திமதியே போற்றி ஓம்
ஓம் நெஞ்சமெல்லாம் இனிப்பாய் போற்றி ஓம்
ஓம் தீயின் சுடரே போற்றி ஓம்
ஓம் நீரின் சுவையே போற்றி ஓம்
ஓம் வானின் கலப்பே போற்றி ஓம் 40

ஓம் நிலனின் திண்மையே போற்றி ஓம்
ஓம் வளியின் விசையே போற்றி ஓம்
ஓம் மலரின் மணமே போற்றி ஓம்
ஓம் தேனின் இனிமையே போற்றி ஓம்
ஓம் அன்பின் விளக்கமே போற்றி ஓம்
ஓம் கருணையின் உறைவிடமே போற்றி ஓம்
ஓம் காக்கும் அன்னையே போற்றி ஓம்
ஓம் திங்களின் தண்ணழகே போற்றி ஓம்
ஓம் தீதற்ற அரும் பொருளே போற்றி ஓம்
ஓம் நித்தமும் நிகழ் பொருளே போற்றி ஓம் 50

ஓம் வல்வினை களைவாய் போற்றி ஓம்
ஓம் சாற்றும் மந்திரக் கருவே போற்றி ஓம்
ஓம் வேத நாயகியே போற்றி ஓம்
ஓம் கொடு நோயினின்று காப்பாய் போற்றி ஓம்
ஓம் கோலம் பல கொண்டாய் போற்றி ஓம்
ஓம் அன்பின் உருவே போற்றி ஓம்
ஓம் அன்னை பராசக்தியே போற்றி ஓம்
ஓம் அகிலாண்டீஸ்வரி நாயகியே போற்றி ஓம்
ஓம் அருளின் வடிவமைப்பே போற்றி ஓம்
ஓம் ஆக்கும் சக்தியே போற்றி ஓம் 60

ஓம் ஆட்டுவிக்கும் தலைவியே போற்றி ஓம்
ஓம் ஆங்காரம் அழிப்பாய் போற்றி ஓம்
ஓம் ஆதிக்கம் அனைத்தும் நீயே போற்றி ஓம்
ஓம் இதயமலர் இருப்பாய் போற்றி ஓம்
ஓம் இன்பம் பல அமைத்தாய் போற்றி ஓம்
ஓம் இறுதியும் முதலும் நீயே போற்றி ஓம்
ஓம் இமயத்தோன் தலைவியே போற்றி ஓம்
ஓம் ஈசனின் பாதியே போற்றி ஓம்

ஓம் ஈகைக் குணமே போற்றி ஓம்
ஓம் ஈடில்லா அருமருந்தே போற்றி ஓம் 70

ஓம் ஈஸ்வரியே அம்பிகையே போற்றி ஓம்
ஓம் உலகம் காக்கும் உத்தமியே போற்றி ஓம்
ஓம் உவகை கொள் அருளே போற்றி ஓம்
ஓம் உன்தாள் பணிந்தோம் போற்றி ஓம்
ஓம் உடனிருந்து காப்பாய் போற்றி ஓம்
ஓம் ஊழி பல கண்டாய் போற்றி ஓம்
ஓம் ஊசல் மனம் அகற்றுவாய் போற்றி ஓம்
ஓம் ஊடி நிற்பாய் அனைத்திலும் போற்றி ஓம்
ஓம் ஊதி அகற்றுவாய் தீவினை போற்றி ஓம்
ஓம் என்றும் இலங்கும் எழிலே போற்றி ஓம் 80

ஓம் எதையும் இயக்கும் சக்தியே போற்றி ஓம்
ஓம் எளிமை விரும்பும் அன்னையே போற்றி ஓம்
ஓம் எங்கள் உள்ளம் நிறைவாய் போற்றி ஓம்
ஓம் ஏங்கி வருவோர்க்கு அருள்வாய் போற்றி ஓம்
ஓம் ஏதமற்ற உள்ளம் மகிழ்வாய் போற்றி ஓம்
ஓம் ஏட்டில் அமையா இன்பமே போற்றி ஓம்
ஓம் ஏதிலார்க்கெட்டா அரும்பொருளே போற்றி ஓம்
ஓம் ஐம்பூதம் நிறை கொண்டாய் போற்றி ஓம்
ஓம் ஐம்புலன் உணர்வு தந்தாய் போற்றி ஓம்
ஓம் ஐவகைத் தொழில் புரிவாய் போற்றி ஓம் 90

ஓம் ஐங்கரன் தாயே போற்றி ஓம்
ஓம் ஒடுக்குவாய் அனைத்தும் உனக்குள் போற்றி ஓம்
ஓம் ஒப்பிலா பெரும் சக்தியே போற்றி ஓம்
ஓம் ஒழிவிலா தியங்கும் இயக்கமே போற்றி ஓம்
ஓம் ஒழுக்கம் பல கற்பிப்பாய் போற்றி ஓம்
ஓம் ஓங்காரமாக வருவாய் போற்றி ஓம்
ஓம் ஓதியே உமைத் துதிப்போம் போற்றி ஓம்
ஓம் ஓடிவந்து துயர் களைவாய் போற்றி ஓம்
ஓம் ஓட்டிடுவாய் எந்திரத் துயர் போற்றி ஓம்
ஓம் அமரருக்கும் அரியோய் போற்றி ஓம்100

ஓம் ஆணவம் தன்னை வெறுப்பாய் போற்றி ஓம்
ஓம் இருப்பிடம் எங்கும் கொண்டாய் போற்றி ஓம்
ஓம் ஈன்றாய் அனைத்தும் நீயே போற்றி ஓம்
ஓம் உறுதுணையென நின்று எமைக் காப்பாய் போற்றி ஓம்
ஓம் ஊடி விரவி உள்ளம் நிறைவாய் போற்றி ஓம்
ஓம் எவ்வுயிர்க்கும் உயிரே போற்றி ஓம்
ஓம் ஏங்கி உம்மையேத் துதிக்கின்றோம் போற்றி ஓம்
ஓம் ஐயமின்றி வந்திடுவாய் போற்றி ஓம்108

தாயே பராசக்தியே
ஓம்சக்தி